**வருகின்ற 2019-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம்தேதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

**முன்னிலை: திரு.S.M.பாரிஜான் பி.ஏ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்**

1. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு 18.06.2019-ல் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவது சம்பந்தமாக10.06.2019 -ம் தேதியில் தினமணி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் தொகை ரூ.14515/-வழங்க கோரி Express Publications ( Madurai ) Private Limited லிருந்து பில் வரப்பெற்றுள்ளது. (Bill No. CBE TN40046425, Dt.11.06.2019) மேற்கண்ட தொகை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண். 1707/2017/அ2)

2. ஈரோடு மாவட்டம் , பவானி நகராட்சி உள்ளாட்சி தேர்தல் 2019 - உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குச்சாவடிகளின் பட்டியல், மண்டலங்கள் வரைபடங்கள் ( Zonal Map) வாக்குப்பெட்டிகள், வாக்கு சாவடிகள் மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இருப்பறைக்கு செல்லும் சாலை வழிகள் ( Route, Map ) மற்றும் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் இடம், வாக்குச் சாவடியில் இருந்து பெறப்பட்ட வாக்கு இயந்திரங்கள் இருப்பு அறை ஆகிய விபரங்கள் மற்றும் அதற்கான வரைபடங்கள் தயார் செய்யவும், மாவட்ட ஆட்சியர் ஒப்புதல் பெறுவதற்கான பிரதிகள், மண்டல பிரதிகள். காவல்துறை, அலுவலகத்திற்கான பிரதிகள் மற்றும் பிறதுறைக்கான பிரதிகள் ஆகியவற்றை தயார் செய்து CD-யில் பதிவு செய்யவும் Book let, தயார் செய்யவும் ஆகும் செலவினம் உத்தேசமாக ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1414/2019/எப்1)

3 பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்.101 ( ந.நி.கு.வ.துறை) நாள்: 30.04.1997-ன்படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால் இந்நகராட்சியில் தற்போது 55 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண். 1320/எச்1/2016, நாள்: 24.07.2019-ன்படி, திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 60 துப்புரவு பணியாளர்கள் M/s Relyon Facility Services Private Ltd. Chennai. நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். K.Dis No 28369/J3/, நாள்: 04.12.2018-ன் வாயிலாக இந்நகராட்சிக்கு ஏற்கனவே வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட 60 துப்புரவு பணியாளர்களுடன் கூடுதலாக 63 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு அப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்திட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகிறது.

இந்நிலையில், M/s Relyon facility Services Private Ltd,Chennai அவர்களின் கடிதத்தின் வாயிலாக 31.10.2019- ஆம் தேதியுடன் முடிவடைகின்ற ஒப்பந்த பணியினை மேலும் 01.11.2019 தேதி முதல் 30.11.2019 ஆம் தேதி முடிய ஒரு மாத காலத்திற்கு

இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.1320/எச்1/2016, நாள்: 24.07.2019 -ல் குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions -க்கு உட்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.544/- என்னும் விலை விகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து சம்மதக்கடிதம் இந்நகராட்சிக்கு வழங்கியுள்ளார்.

இந்நிலையில் தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் ( NGT) வாயிலாக 100 சதவீதம் குப்பைகளை தரம் பிரித்து சேகரித்து 100 சதவீதம் அறிவியல் முறைப்படி Final Disposal செய்ய வேண்டும் எனஅறிவுறுத்தப்பட்டு தற்போது இந்நகராட்சியில் மேற்குறிப்பிட்டவாறு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இந்நிலையில் நகரின் சுகாதாரப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகிறது. மேலும் தற்போது மழைக்காலம் தொடங்கி உள்ளதன் நிலையில் டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் நகரில் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணிகளை திறம்பட மேற்கொண்டு நகரின் சுகாதாரத்தினை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பொறுப்பாகும் என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படி சுகாதார பணிக்கான ஒப்பந்தகாலத்தை 01.11.2019-ம் தேதி முதல் 30.11.2019 வரை நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ.9.8 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1320/2016/எச்1)

4. பவானி நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர் இணைப்புகளில் Flow Control Valve பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.198,நாள்: 30/8/2019 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 4/10/19 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி | 0.11 % | மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் ஆர்.என்.& கோ | 0.94 % | மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.11% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1011/2019/இ1)